நாள் -03.06.2025

**C.C. No.**75/2022

**அ.சா.**2 செந்தில்குமார், த/பெ. ராமசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 03rd **day of June** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் பொழுதும் சொன்னேன் என்றால் சரிதான். நான் 05.01.2020 ம் தேதி அரசு மருத்துவமனைக்கு சென்ற பொழுது மாலை சுமார் 7 மணி இருக்கும். நான் முதல் விசாரணையில் என்னை அரசு மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்று அனுமதித்தார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கோவை அரசு மருத்துவமனையில் என்னை மருத்துவர்கள் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

2. கோவை அரசு மருத்துவமனையில் எதிரிகள் ஐந்து பேரும் வந்து என்னை தாக்கியதாக மருத்துவரிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்குக் காரணம் எதிரிகள் என்னை தாக்கியதில் என் முகம் முழுவதும் காயம் ஏற்பட்டது. மேலும் பல் உடைந்து விட்டது. ஆகவே என்னால் மருத்துவரிடம் அது குறித்து என்னால் சொல்ல இயலவில்லை. நான் சொல்வது போல் என் முகம் வீக்கம் இருந்தாலும் பல் உடைந்து இருந்தாலும் மேற்கூரிய விவரத்தை மருத்துவர் விபத்து பதிவேட்டில் குறித்து இருப்பார் என்றால் சரிதான் மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட காயங்களை சொன்னேன் என்றால் சரிதான். குறிப்பாக எனக்கு பல் உடைந்த விபரத்தை மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரிதான்

3. நான் தற்பொழுது முதல் விசாரணையில் மற்றும் குறுக்கு விசாரணையின் பொழுது எனக்கு பல் மற்றும் முகம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் எதிரிகள் எதை பயன்படுத்தி அடித்தார்கள் என தெரியாது என சொல்லி உள்ளேன் மேற்சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரணை கொடுத்து சொன்னேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் எதிரிகள் கன்னத்தில் அடித்தும் குத்தவும் செய்தார்கள். அவர்கள்

கன்னத்தில் அடிக்கும்போது நான் என்னுடைய கைகளால் முகத்தை மூடிக்கொண்டேன். அதனால் எதை பயன்படுத்தி அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை என்று தான் சொல்லி உள்ளேன்.

4. முதல் விசாரணையில் 1ம் எதிரி என்னை கல்லால் தாக்க வந்ததாக சொல்லி உள்ளேன். மேற்சொன்ன விபரத்தை போலீசார் என விசாரித்த பொழுதும் குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சி அளிக்கப்படும் முன்பாக போலீசார் பதிவு செய்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான்.போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் பொழுது 1ம் எதிரி என்னை கல்லால் தாக்க வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக முதல் விசாரணையில் தாக்க வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. மேலும் நான் முதல் விசாரணையில் எதிரிகள் ஐந்து பேரும் என்னை குமணன் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அடித்ததாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன். மேற்சொன்ன விபரத்தை போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் பொழுது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் சொன்னேனா என்று எனக்கு தற்பொழுது சரியாக ஞாபகம் இல்லை. நான் உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக மிகைப்படுத்தி சாட்சியம் அளிப்பததாக எனக்கு ஞாபகம் இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் எதிரிகள் என்னை வண்டியில் இருந்து தள்ளினார்கள் என்றும் நான் என்னுடைய நண்பர் சதீஷ் என்பவருக்கு போன் செய்து அவர் வந்தார் என முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன்.

6. மேற்சொன்ன விவரத்தை போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் பொழுது குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் தற்பொழுது சொல்வது போல் மேற்சொன்ன விபரத்தை போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்தபோது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், சொல்லி உள்ளதாக வழக்கத்திற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக என் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் என் மனைவி கடந்த 07.01.2020ம் தேதி புகார் கொடுத்தார். போலீசார் என்னை புகார் கொடுத்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து விசாரித்தார்கள். சம்பவம் குறித்து எனது மனைவிக்கு நான் தான் தகவல் சொன்னேன். என் மனைவியுடன் நான் காவல் நிலையம் செல்லவில்லை. என் மனைவியுடன் எனது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் காவல்

நிலையம் சென்று இருந்தார்கள்.

7. என்னை போலீசார் விசாரித்து பதிவு செய்த வாக்குமூலம் மற்றும் முதல்விசாரணை சாட்சியத்தில் புகார் கொடுக்கும் பொழுது என் மனைவியுடன் எனது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எதிரிகளின் பெயர் புகார் கொடுப்பதற்கு முன்பாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மனைவியிடமும் எதிரிகளின் பெயர் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எனது வண்டியை இடித்து சேதாரம் ஏற்படுத்தியதாக சொல்லப்படும் நாள் மற்றும் நேரம் என்னவென்றால் 01.01.2020 ஆம் தேதி காலை சுமார் 9 மணி முதல் 09.30 மணிக்குள்ளாக இருக்கும். எனது மகேந்திரா பிக்கப்பில் எந்த சேதாரமும் பெரிய அளவில் ஏற்படவில்லை. சிராய்ப்பு முன் பக்கத்தில் மட்டும் ஏற்பட்டது.மேற்படி எனது வாகனத்தில் ஏற்பட்ட பெயிண்ட் சிராய்ப்பை போலீசாரிடம் காண்பித்தேனா என்றால் காண்பிக்கவில்லை.

8. மேலும் பெயிண்ட் சிராய்ப்பை சரிசெய்வதற்கான ரசீதுகள் எதுவும் போலீசாரிடம் நான் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேலும் எதிரிகள் என்னை அடித்ததாக சொல்லப்படும் சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் என குறிப்பிட்டு என்னை போலீசார் விசாரித்த பொழுதும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 01.01.2020 ம் தேதி எதிரிகளின் வாகனம் எனது வாகனத்தின் மீது மோதியதை யார் யார் பார்த்தார்கள் என்றும் குறிப்பிட்டு என்னை விசாரித்த பொழுது சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் நான் முதல் விசாரணையில் யார் யார் என்னை கடத்திச் சென்றார்கள் என்ற விபரத்தையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தான் கடத்திச் சென்றதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன்.

9. போலீசார் என்னை விசாரித்த பொழுது யார் யார் என்னை கடத்தினார்கள் என்று நாம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், அப்பொழுது எனக்கு எதிரிகளின் பெயர் தெரியாது ஆகவே என்னால் குறிப்பிட்ட சொல்ல இயலவில்லை.எதிரிகளின் பெயரை என் மனைவி புகார் கொடுத்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து தெரிந்து கொண்டேன். என் மனைவி கொடுத்த புகாரிலியே எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு கொடுத்துள்ளார் என்றும், நான் என் மனைவி புகார் கொடுத்து மூன்று அல்லது நான்கு நாட்கள் கழித்து எதிரிகளின் பெயர் தெரிந்து கொண்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என நான் சொல்வதிலிருந்தே நான் நீதிமன்றத்தில் போய் சாட்சியம் அளிக்கிறேன் என்பது

தெள்ளத்தெளிவாகிறது என்றால் சரியல்ல.

10. என்னை விசாரித்தார்கள் என நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் .ஐந்து நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றேன். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் நான்கு நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளதாக சொல்லிவிட்டு தற்பொழுது ஐந்து நாட்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக முன்னுக்கு பின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன். என்றால் சரியல்ல.நான் மருத்துவமனையில் இருந்த பொழுது போலீசார் என்னை விசாரித்தார்கள் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் என்னை கடத்தவும் இல்லை, எதிரிகள் எனக்கு எந்த காயத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 05.01.2020 ம் தேதி 5ம் எதிரி தாமரைக்கண்ணன் என்பவர் ஊர்க்காவல் படையில் பாதுகாப்பு பணிக்காக பெரியநாயக்கன்பாளையத்தில் முதலமைச்சர் பாதுகாப்பு பணியில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் அளித்த சாட்சியத்தில் 5 ஆம் தேதி தாமரைக்கண்ணன் அவர்களுக்கு எதிராக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்றால் சரிதான்.ஆனால் சம்பவத்தின் பொழுது அவர்தான் எனது வாகனத்தின் மீது அவருடைய வாகனத்தில் மோதினார். நான் தற்பொழுது சொன்ன விபரத்தை முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. நான் கொங்கு வெள்ளாளர் கவுண்டர் இனத்தைச் சார்ந்தவர். இரண்டாம் எதிரி கார்த்திக் எனது சமுதாயத்தைச் சார்ந்தவர். அவர் என்னை அடிக்கவில்லை. அவர் என்னுடைய உயிரை காப்பாற்றினார். இரண்டாம் எதிரி கார்த்தி சம்பவத்தின்போது என் உயிரை காப்பற்றியதாக போலீசார் விசாரணையின் பொழுது குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் அப்பொழுது நான் சொல்லக்கூடிய நிலையில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது நான் சுயநினைவுடன் இருந்தேன். நான் முதல் விசாரணையில் என்னை மருத்துவமனையில் இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்று சேர்த்ததாக சொல்லி உள்ளேன்.

13. மேற்சொன்ன விபரத்தை போலீசார் என்னை விசாரித்த பொழுது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை

சிறிது தூரம் இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றார்கள். அதன் பின்னிட்டு காரில் அழைத்துச் சென்று மருத்துவமனைக்கு சேர்த்தார்கள். மேற்சொன்ன விபரத்தையும் என்னை போலீசார் விசாரித்த பொழுது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரிகளிடம் உள்ள ஜாதி ரீதியிலான காழ்ப்புணர்ச்சியினால் பொய்யான வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் எனது வாகனத்தின் மீது மோதவில்லை என்றும் எதிரிகள் என்னை கடத்திக் செல்லவில்லை என்றும் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல.

ARUNKUMAR T Digitally signed by ARUNKUMAR T Date: 2025.06.03 20:11:10 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

நாள் -03.06.2025

**C.C. No.**75/2022

**அ.சா.**3 சதீஸ்குமார், த/பெ. பாஸ்கரன்.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 03rd **day of June** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**1 முதல் 5 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விபரத்தை தான் போலீசார் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் போதும் சொன்னேன் என்றால் சரிதான். 01.01.2020 ஆம் தேதி எத்தனை மணிக்கு எனக்கு செந்தில்குமார் போன் செய்தார் என்றால் அன்றைய தினம் எனக்கு அவர் போன் செய்யவில்லை. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 01 ம் தேதி எந்த சம்பவமும் நடைபெறவில்லை. அது குறித்து நான் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. நான் செந்தில்குமார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை பார்த்ததாக செந்தில்குமார் கேட்டுக்கொண்டதற்கு எனது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.03 20:11:16 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**
**சூலூர்**